

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் 'திராவிட மாடல்' ஆட்சியில் பொதுப்பணித்துறையின் சாதனை!

# குமரியின் அடையாளமாக மாறிய கண்ணாடி பாலம்!

## லட்சக்கணக்கானோர் பார்வையிட்டனர்!

கன்னியாகுமரி. பிப். 18 -
கன்னியாகுமரியின் புதிய அடையாளமாக கண்ணாடி நடைபாலம் உருவாகியுள்ளது. இதனை லட்சக்கணக்கானோர் பார்வையிட்டுள்ளனர்.

சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு தினமும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இங்கு வரும் சுற்றுலா பயணிகள் சூரிய உதயம் மற்றும் சூரிய அஸ்தமனம் ஆகியவற்றை பார்வையிட்டு முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரையில் குளித்து மகிழ்ந்து, பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக படகுகளில் பயணித்து, கடல் நடுவே அமைக்கப்பட்டுள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் 133 அடி உயர திருவள்ளுர் சிலை ஆகியவற்றை பார்த்து மகிழ்கின்றனர்.

திருவள்ளுவர் சிலை படகு தளத்தில் கடலுக்கடியில் சுண்ணாம்பு பாறைகள் அதிகமாக காணப்படுகிறது. இதனால் கடல் அலையின் சீற்றம் மற்றும் தாழ்வான நீர்மட்டம் ஏற்படும் காலங்களில் அடிக்கடி திருவள்ளுவர் சிலைக்கு படகு போக்குவரத்து தடைபடும் நிலை இருந்து வந்தது.

### மாறிய சீசன்

**கன்னியாகுமரியில் சபரிமலை சீசன் மற்றும் கோடை விடுமுறை காலமான ஏப்ரல், மே மாதம் சீசன் என இரண்டு சீசன் தான் உண்டு. சபரிமலை சீசன் நவம்பர் மாதம் தொடங்கி ஜனவரி 21 வரை நடைபெறும். தற்போது சபரிமலை சீசன் முடிந்த பிறகும் சுற்றுலா பயணிகள் வருகை குறையவில்லை. மகா கும்பமேளா நடைபெறும் நிலையில் வடமாநில சுற்றுலா பயணிகள் பலர் கன்னியாகுமரிக்கும் வருகை தருகின்றனர். நாள்தோறும் அதிகரிக்கும் சுற்றுலா பயணிகளின் வருகையால் வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.**





இதனால் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிடும் சுற்றுலா பயணிகள் அருகில் உள்ள திருவள்ளுவர் சிலையை பார்க்க முடியாமல் ஏமாற்றத்துடன் செல்லும் நிலை நிலவி வந்தது. எனவே, திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் மண்டபத்தை இணைக்கும் வகையில் பாலம் அமைக்க சுற்றுலாப் பயணிகள் சார்பில் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் தமிழக அரசு சார்பில் ரூ.38 கோடி செலவில் புதிய கண்ணாடி நடை பாலம் அமைக்கப்பட்டுள்ளது. 77 மீட்டர் நீளம், 10 மீட்டர் அகலம் மற்றும் கடல் மட்டத்தில் இருந்து 7 மீட்டர் உயரத்தில் இந்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலத்தின் நடுவே சுமார் 2.4 மீட்டர் அகலத்திற்கு கண்ணாடி இழை பொருத்தப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே கடல் மீது கட்டப்பட்ட முதல் கண்ணாடி பாலம் இதுவாகும். திருவள்ளுவர் சிலை 25வது ஆண்டு வெள்ளிவிழா கொண்டாட்டத்தையொட்டி, கடந்த டிசம்பர் 31ம் தேதி கன்னியாகுமரியில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த கண்ணாடி பாலத்தினை திறந்து வைத்தார்.

அன்று முதல் கண்ணாடி பாலத்தை பார்வையிட சுற்றுலா பயணிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அதன்படி கடந்த ஜனவரி மாதம் 2 லட்சத்து 14 ஆயிரத்து 518 பேர் இதனை பார்வையிட்டனர். இந்த மாதம் 12ம் தேதி வரை 88 ஆயிரத்து 275 பேர் பார்வையிட்டனர். 13ம்தேதி 7035, 14ம்தேதி 7787, 15ம்தேதி 7617 சுற்றுலா பயணிகள் கண்ணாடி பாலத்தை கண்டு ரசித்தனர். நேற்று முன்தினம் காலை முதல் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது. ஆனால் மதியம் 2 மணிக்கு பின்னர் காற்று அதிகமாக வீசியதால் படகு சேவை நிறுத்தப்பட்டது. நேற்று முன்தினம் 5024 சுற்றுலா பயணிகள் கண்ணாடி பாலத்தில் நடந்து சென்று கடல் அழகை ரசித்தனர். இந்த கண்ணாடி நடைபாலம் கன்னியாகுமரியின் புதிய அடையாளமாக மாறிவருகிறது.

# தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்!

*தூத்துக்குடி, பிப். 18 -*
*கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய கூட்டணி யின் சார்பில் போட்டியிட்டு பல இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, நல்லூர், அம்மன்புரம், வள்ளிவிளை,*

*பூச்சிக்காடு, காயாமொழி, நடு நாலுமூலைக்கிணறு, கீழ நாலுமூலைக்கிணறு, ந.முத்தையா புரம், பரமன்குறிச்சி, வெள்ளாளன்விளை, உடன்குடி, செட்டியாபத்து, மெஞ்ஞானபுரம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்.*

*முன்னதாக, நடு நாலு மூலைக்கிணறு பகுதியில் புதுப்பிக்கப்பட்ட துணை சுகாதார நிலையத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளருமான அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி,*

*மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், ஒன்றியச் செயலாளர்கள் செங்குழி ஏ.பி. ரமேஷ், பரமங்குறிச்சி இளங்கோ, டி.பி. பாலசிங், மா.மால் ராஜேஷ், பேரூர் கழக செயலாளர், துணைத் தலைவர் உடன்குடி பேரூராட்சி, ஆர்.பி.எஸ்.ஆனந்த் ஏரல், கணேசன், தூ த்துக்குடி நகரச் செயற்குழு உறுப்பினர் எம்.கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*

## சென்னையில் ரூ.4.35 கோடியில்

# பேருந்து நிழற்குடைகள் சீரமைப்பு பணிகள்!

*சென்னை, பிப். 18 -*
*சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.4.35 கோடியில் பேருந்து நிழற்குடைகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சி சார்பில் 387 கி.மீ. நீளமுடைய 471 பேருந்து தடசாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

*இவற்றின் வழியாக சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் 31 பணிமனைகளில் இருந்து நாள்தோறும் 3,233 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.*

*இவற்றின் மூலம் நாளொன்றுக்கு 30 லட்சத்து 17 ஆயிரம் பேருக்கு மேல் பயன்பெற்று வருகின்றனர். இந்த வழித்தடங்களில் 1,363 பேருந்து நிழற்குடைகளை மாநகராட்சி அமைத்துள்ளது.*

*இவை, பொதுமக்களை கோடை காலத்தில் வெயிலில் இருந்தும், பருவமழைக் காலத்தில் மழையிலிருந்தும் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த நிழற்குடைகளை தூய்மையாக பராமரிக்க கடந்த மாநகராட்சி சார்பில் கடந்த ஆகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதங்களில் தீவிர தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 100 டன்னுக்கும் மேற்பட்ட குப்பை கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன.*

*அதன் தொடர்ச்சியாக இந்த நிழற்குடைகளை ரூ.4.35 கோடியில் சீரமைக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. அதற்கான டெண்டரும் கோரப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்க இருப்பதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

## மும்மொழி தேசியக் கல்வி கொள்கையை ஏற்க மிரட்டல் விடும்

# ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு கண்டனம்!

## ஆதித்தமிழர் பேரவை இரா.அதியமான் அறிக்கை!

*சென்னை, பிப்.18 -*
*புதிய கல்விக் கொள்கை மற்றும் மும்மொழித் திட்டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டால் மட்டுமே ஒன்றிய அரசு தன் நிதியை விடுவிக்கும் என மிரட்டல் தொனியில் கூறியிருக்கும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானை ஆதித்தமிழர் பேரவை வன்மையாக கண்டிக்கிறது.*

*எந்தவொரு சமூகமும் முன்னேற்றம் அடைய கல்வி என்பது மிக மிக அவசியமான பேராயுதமாக இருக்கிறது.*

*திராவிட மாடல் என்பது கல்விக்கு முக்கி யத்துவம் கொடுத்து இருமொழிக் கொள்கை மூலம் பகுத்தறிவால் செதுக்கி உயர் கல்வியில் மற்ற மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி தமிழகம் தான் முன்னோடியாக சிறந்து விளங்குகிறது என்று தேசிய தர வரிசைப் பட்டியல் வெளிக்காட்டியுள்ளது.*

*ஆனால் பா.ச.க. ஒன்றிய அரசு கல்வி விசயத்தில் அறிவியலையும் அறிவையும் வளர்த்துக் கொள்ள தயாராக இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக*

*கல்வியில் மும்மொழித் திட்டம் மற்றும் புதிய கல்விக் கொள்கை மூலம் திரிபு வரலாற்றை திணித்து புராண இதிகாச குப்பைகளை பாடத்திட்டங்களில் சேர்க்கும் படியான மோசடி செயல்களை அரங்கேற்றவும் இதன் மூலம் இந்தியை வலிய திணிக்க முற்படுகிறது.*

*இந்நிலையில் பா.ச.க. ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களிடம் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையை எப்போது? வழங்குவீர்கள் என பத்திரிக்கையாளர்கள் கேட்டதற்கு மும்மொழித் திட்டத்தையும் புதிய கல்விக் கொள்கையையும் ஏற்றுக் கொண்டால்தான் நிதி வாங்குவோம் இல்லையென்றால் தரமுடியாது என்று அடாவடியாக கூறியிருக்கிறார் ஒன்றிய அமைச்சர். இந்தி மொழியை தமிழர்கள் கற்றால் தான் நிதி வழங்குவோம் என்று கூறுவது பச்சை அயோக்கியத்தனம். இதை ஏற்றுக் கொண்டால் தான் நிதி தருவோம் இல்லையென்றால் தர மாட்டோம் என்று கூறுவது கூட்டாச்சி தத்துவத்திற்கு எதிரானது. தமிழ்நாட்டை வஞ்சிப்பதோடு மிரட்டிப் பார்க்கும் செயல் . அங்கிகரிக்கப்பட்ட 22 தேசிய மொழிக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அமைச்சர் இந்திக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் அமைச்சரின் பதில் எப்படி நியாயம் ஆகும்?*



*இது தமிழ் மக்களை கொந்தளிக்கச் செய்திருக்கிறது. ஒன்றிய அமைச்சர் கூறும் இந்தப் பதில் ஒன்றிய அரசின் பா.ச.க. குரல் தான் தொடர்ந்து இது போன்று தமிழகத்தை வஞ்சிப்பார்களேயானால் தமிழர்கள் நாங்கள் ஒன்றிய அரசுக்கு எதிராக "வரி கொடா இயக்க" த்தை தொடங்கக் கூடிய நிலைக்கு தள்ள வேண்டாம்-*

*இவ்வாறு இரா.அதியமான் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

# நெய்வேலி சட்டமன்றத் தொகுதி கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் – சபா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*கடலூர், பிப்.18 -*
*கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் என்.எல்.சி. தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது.*

*கூட்டத்திற்கு தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சரும் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளருமான சி.வெ. கணேசன் தலைமை தாங்கினார்.*

*நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா .இராஜேந்திரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கடலூர் மாவட்டம் நெய்வேலிக்கு வருகை தரும் தமிழக முதல்வருக்கு என்.எல்.சி. ஆர்ச் கேட்டில் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும்,*

*நெய்வேலி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா திடலில், சுமார் 5,000க்கு மேற்பட்ட மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகி தமிழக முதல்வர் தலைமையில் இணைய உள்ளனர்,*

*மார்ச் 1 ஆம் தேதி தமிழக முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு சட்டமன்ற தொகுதி முழுவதும் கழக கொடியேற்றி பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்ற ப்பட்டது.*

*இந்நிகழ்வில் நெய்வேலி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் இளைய ராஜா, மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாவாடை கோவிந்தசாமி,முன்னாள் எம்.எல்.ஏ கலைசெல்வன், முன்னாள் ஒன்றிய பெருந் தலைவர்*

*சபா .பாலமுருகன், நெய்வேலி நகர செயலாளர் குருநாதன், ஒன்றிய செயலாளர்கள் குணசேகரன், சந்தோஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பொ.புகழேந்தி,*

*என்.பலராமன், க.அறிவழகன், ஒன்றிய அவைத் தலைவர் ராஜா, மாவட்ட பிரதிநிதி ஆடலரசன், ஒன்றிய துணை செயலாளர்கள் செல்வகுமார் ,சுமதி நந்தகோபால், ஒன்றிய பொருளாளர் அய்யப்பன் ,*

*என்எல்சி தொமுச பொதுச்செயலாளர் என். பாரி, தொ.மு.ச, பொருளாளர் ஆர்.ஐயப்பன்,அலுவலக செயலாளர் ஜெரால்டு,*

*நகர அவைத் தலைவர் நன்மாறபாண்டியன், ஒன்றிய அவைத்தலைவர் வீரராமச்சந்திரன், ஒன்றிய பொருளாளர் ஆனந்தஜோதி, துணை செயலாளர் ஏழுமலை,நகர துணை செயலாளர்கள் செந்தில்குமார், கருப்பன், செந்தமிழ்ச் செல்வன், பொருளாளர் மதியழகன், மாவட்ட பிரதிநிதி நாசர், ரவிச்சந்திரன்,கண்ணுத்தோப்பு வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ், சதாம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி , மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பிலோமினா ,நகர இளைஞரணி அமைப்பாளர் ஸ்டாலின், மாவட்ட தொண்டரணி தலைவர் மணிவண்ணன், துணைத் தலைவர் ஸ்டாலின், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*



தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் ரூ.6.87 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கோவில்பட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் தினசரி சந்தை கட்டிடத்தை கழக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி , அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். உடன், அமைச்சர்கள் பெ.கீதா ஜீவன், அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், எம்.சி. சண்முகையா எம்.எல்.ஏ., மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், நாகர்கோவில் மேயர் மகேஷ், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, கருணாநிதி, பீக்கிளிப்பட்டி முருகேசன், கி.ராதாகிருஷ்ணன், கருப்பசாமி, சின்னப்பாண்டியன், கோவில்பட்டி நவநீத கண்ணன், இரா.ரமேஷ், கு.தவமணி, ஆனந்த சேகரன், எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், திருச்செந்தூர் செங்குழி ஏ.பி.ரமேஸ், வாள் சுடலை, எஸ்.கே.பேக்கர்ஸ் சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.





கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில், நேற்று (17.02.2025) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், "முதல்வர் மருந்தகம்" திறப்பு விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்தியபிரத சாகு. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார். கூடுதல் பதிவாளர் (நுகர்வு பணிகள்) அம்ரித் உட்பட இணைப்பதிவாளர்கள் மற்றும் கூடுதல் பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.